04-08-2011

## தலைப்பு : 'தத்தை விடு தூது' பற்றிய அறிமுகம்

**இத்தலைப்பில் மு. மயூரனின் தொடக்கவுரையுடன் இடம் பெற்ற கலந்துரையாடலின் சுருக்கம் வருமாறு,**

சமூகத்தை தமக்கேற்றபடியான அதிகாரப் படிநிலை அமைப்பின் கீழ் கொண்டுவர சிலர் விரும்பும் போது, அந்த அதிகாரப்படிநிலையைக் கட்டிக்காப்பதற்கு ஏதுவான "அறங்களை" போதிப்பர். அவ்வாறு போதிக்கப்படும் அறங்களை வழி மொழிபவையே இலக்கியங்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பர். காலப்போக்கில் இவ்வாறு படைக்கப்பட்ட "வழிமொழிவு" இலக்கியங்களே மரபாகிப்போகும். இருக்கின்ற சமூக அமைப்பை எதிர்த்துக் கேள்வி கேட்க எவரும் துணிய மாட்டார்கள்.

இறுக்கமான குடும்ப அமைப்பு, அரசியல் அமைப்பு, பெண்ணடிமைத்தனம், சாதி அடுக்குமுறை, மத அடிப்படைவாதங்கள் போன்ற பிற்போக்கான அம்சங்களை எதிர்த்துக் கேள்வி கேட்கும் இலக்கியங்களும் அவ்வப்போது எழுகின்றன. அவ்வாறு எழுந்த ஓர் இலக்கியமே "தத்தை விடு தூது" ஆகும்.

இந்நூல் 33 செய்யுட்களைக்கொண்ட தூது இலக்கியமாகும். இதனை திருகோணமலை த. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் இயற்றியுள்ளார்கள். இற்றைக்கு 120 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது 1892ம் ஆண்டளவில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. இது பாரதியார் பெண்விடுதலைக்கருத்துக்களை எழுதத்தொடங்கிய காலத்துக்கும் முற்பட்டதாகும்.

சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் தனது காதல் தோல்வி அனுபவத்தை அதன் சமூகப்பின்னணியோடு ஆய்வு செய்து வேதனை உணர்வும், சமூகம் பெண்களை அடக்கி வைக்கும் தன்மைக்கு எதிரான கூர்மையான விமர்சனமும் கலந்ததாக தத்தை விடு தூதினை ஆக்கியுள்ளார்.

* நிச்சயிக்கப்பட்ட திருமணம் எனும் அமைப்பை நிராகரித்தல்
* பெற்றோர் மேலாதிக்கத்தைக் கேள்விக்குட்படுத்துதல்
* பெண் கல்வியை வலியுறுத்துதல்
* பெண்களை அடக்கி ஒடுக்கிக் கட்டமைக்கப்பட்டுள்ள ஆணாதிக்க சமூக அமைப்பைத் தீவிரமாக விமர்சித்தல்

போன்ற பரப்புக்களில் தத்தை விடு தூது தனது சமூக விமர்சனத்தைச் செய்கிறது.

அறிவுத்தளத்தில் நின்று பெண் விடுதலையைக் காணாமல் உணர்வுத்தளத்தில் நின்று அணுகுவதால் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் பெண்விடுதலை இலக்கியங்களுள் தத்தை விடு தூது மாறுபடுகிறது.

காதல் தோல்வி என்கிற தனிமனிதப் பிரச்சினையின் மனவருத்தங்களை தனி நபர்கள் மீதான குற்றச்சாட்டாகவும், "பெண்களே இப்படித்தான்" என்பது போன்ற வெறும் பேச்சுக்களாலும் பழிவாங்கல் முயற்சிகளாலும் எதிர்கொள்ள முனையும் நிலை இன்றும் காணப்படுகிறது. சரவணமுத்துப்பிள்ளையோ, எல்லா விடயங்களும் அதனதன் அரசியல் பின்னணியோடும் வரலாற்றுப்பின்னணியோடும் சமூகத்துடனும் சமூக அரசியலுடனும் பொருத்திப்பார்க்கப்படவேண்டும் என்கிற அறிவியல் பார்வையினைக்கொண்டிருக்கிறார். தன்னுடைய காதல் தோல்விக்கான காரணத்தை சமூக அமைப்பில், புறச்சூழலில் தேடிக்கண்டடைகிறார். சமூகப் பிற்போக்குத்தனங்களும் ஆணாதிக்க அமைப்புமான அந்தக்காரணத்தை மிகத்தீவிரமாக விமர்சிக்கிறார்.

பாடல்களில் பேசப்படும் கருத்துக்கள் ஒன்றுக்கொன்று முரண்படாது பெண் விடுதலை பற்றிய ஆழமான புரிந்துணர்வை ஆசிரியர் பெற்றிருக்கிறார் என்பதை சிறப்பாக வெளிப்படுத்துகின்றன.

இனிய கவிதை நயமும் காதல் நயமும் சமூக விமர்சனத்தில் தீவிரமும் கொண்டதாக அமையும் தத்தை விடு தூது முற்றிருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியமாக இருந்தபோதும் இன்று தேவைப்படுகிற, இன்று உயிர்ப்பான, இன்றும் முற்போக்கானதாக இருக்கிற ஒரு நூலாகும். அதுவே அதன் தனிச்சிறப்புமாகும். தத்தை விடு தூது இக்கலாத்தின் தமிழ் நடையில் பதின் வயதினரும் இலகுவாகப் படித்துப் புரிந்துகொள்ளத்தக்க விதமாக பொழிப்புரை எழுதப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டும் என்று கலந்துரையாடலின் போது வலியுறுத்தப்பட்டது.

### எதிர்வரும் வாரங்களுக்கான தலைப்புக்கள்

11 - 08 -2011

**திருகோணமலை உள்ளூராட்சி தேர்தல் அனுபவங்கள்**
- சத்தியதேவன் சற்குணம்

18 - 08 -2011

**பெரியபுராணமும் அதன் அரசியலும்**
- சபா தனுஜன்

25 - 08 -2011

**வரலாற்றுப் பொருள்முதல்வாதம்**
- சி. சிவசேகரம்



பிடல் காஸ்ட்ரோ
(Fidel Castro, பிறப்பு: ஆகஸ்ட் 13, 1926)

கியூபாவின் குடியரசுத் தலைவர் ஆவார். 1959 இல் புரட்சியை வழிநடத்தி புல்ஜென்சியோ பாட்டிஸ்ட்டாவின் அரசை மக்களுடன் இணைந்து வீழ்த்தினார். 1976 இல் குடியரசுத் தலைவராய் (சனாதிபதியாகப்) பதவியேற்றார். கியூபாவின் பொதுவுடைமைக் கட்சியின் முதல் செயலாளராக 1965 இல் பதவியேற்ற இவர் கியூபாவை சோசலிசக் குடியரசாக்கினார்.

### சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

முற்றுமுழுதாக திறந்த கலந்துரையாடல் வடிவில் அமையும் இக்கூட்டங்களில் அனைவருமே கலந்துகொள்ள முடியும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்துச் செல்லும் பணியில் இணைந்துகொள்ளவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

# திருகோணமலை உள்ளூராட்சி தேர்தல் - கள அனுபவப் பகிர்வுகள்

*11-08-2011* அன்று உரையாடப்படவுள்ள விடயப்பரப்பு - சத்தியதேவன் சற்குணம்

- திருகோணமலையில் தேர்தல்கள் எவ்வாறு நோக்கப்படுகின்றன. உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் மக்கள் பங்கேற்க வேண்டியதன் அவசியங்கள் என்ன?

- இந்த தேர்தலில் சமூக சக்திகளுடன் வேலை செய்யும் நாம் ஏன் நேரடியாக பங்குபற்றினோம்? அதை தூண்டிய அக புறச் சூழல் என்னென்ன?

- வேட்பாளர் தெரிவுகள் எவ்வாறு செய்யப்பட்டன? கட்சிகளின் எதிர்பார்ப்பு என்ன? வேட்பாளர்கள் போட்டியிட்டதன் காரணங்கள் என்ன? வேட்பாளர் தெரிவுகளில் பால் சமத்துவம், வர்க்க நிலைப்பாடுகள் தமிழ் தரப்புகளில் எத்தன்மையானதாக இருந்தது? கட்சிகளால் வேட்பாளர்களுக்கு வந்த அனுகூலம், வேட்பாளர்களால் கட்சிகளுக்கு வந்த அனுகூலம் எவை?

- மேலெழுந்த தேசிய கருத்தியல்களைத் தாண்டி உள்ளூராட்சித தேர்தல்களில் செல்வாக்கு செலுத்திய உள்ளூர் தன்மைகளான இனத்துவ சாதி, கல்வி, உறவுமுறைகள், பிரதேசம், பால்நிலை போன்றவை தவிர்க்க முடியாத சக்தியாக தொழிற்பட்டமை மற்றும் நிதி மிக முக்கிய காரணியாக தேர்தலில் செயற்பட்டமை.

- சுனாமிக்கு பின்னர் அரசுசார நிறுவனங்களால் அரசியல் நீக்கம் செய்யப்பட்ட சிந்தனைமுறைக்குட்பட்ட கிராம மட்ட சமூக அமைப்புகள் இத்தேர்தலில் என்ன செய்தன? எவ்வாறு நோக்கின. அரசுசார நிறுவனங்கள் இத்தேர்தல் தொடர்பில் எவ்வாறு செயற்பட்டன?

- வாக்காளர்களில் பெரும்பான்மையாக இருந்த பெண்களின் நிலை, வெளிப்பாடுகள் இத்தேர்தலில் எவ்வாறு இருந்தன.

- மேற்கொள்ளப் பட்ட பிரச்சார உத்திகள் எவை? பிரச்சாரத்தின் போது நாம் எதிர் கொண்ட சவால்கள் எவை?

- தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், பொலிஸ், அதிகாரிகளின் செயற்பாடுகள் எத்தகையதாக இருந்தது.

- தேர்தல் முடிவுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள் எவையாக இருந்தன? தேர்தல் முடிவுகளை நாம் எவ்வாறு நோக்க வேண்டும்.

- எதிர்காலத்தில் தேர்தல் அரசியலில் ஈடுபடுவதென்றால் நாம் எவ்வாறு தேர்தலை எதிர்கொள்ளலாம்.

**சமூக விஞ்ஞான வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.**

## சிங்களச் சுற்றுலாப் பயணிகள் மீதான இனவெறித் தாக்குதல்

தமிழகத்தின் அரசியல் அமைப்பொன்றின் உறுப்பினர்கள் அம் மாநிலத்துக்குச் சுற்றுலாப்பயணமாகச் சென்றிருந்த சிங்களப் பொதுமக்கள் மீது இனவெறித் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள் என்ற செய்தி ஆழ்ந்த மனவருத்தத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துகிறது.

சிங்கள மக்களுக்கு தங்குமிடங்களை வழங்க வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து "நாம் தமிழர்" அமைப்பு நடத்தியுள்ள ஆர்ப்பாட்டமும், தொடர்ச்சியாக சிங்கள மக்கள் மீது அவர்கள் பயன்படுத்திவரும் இனவாதச் சொற் பயன்பாடும் கண்டிக்கத்தக்கத்து.

இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அரசியல் உரிமைகள் தொடர்பாகவும், முழு இலங்கை மக்களதும் நல்வாழ்வுக்கான போராட்டத்திலும் அக்கறை கொண்டுள்ள எமக்கு இச்செய்தி அருவருப்பூட்டுவதுடன் இலங்கையின் அரசியல் எதிர்காலம் குறித்த அச்சத்தையும் ஏற்படுத்துகிறது.

**இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டம் என்பது, இலங்கை சிங்கள பவுத்த மக்களுக்கே சொந்தமானதென்றும் மற்றைய தேசிய இனங்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என்றும் வலியுறுத்திவரும் சிங்கள பவுத்த பேரினவாத சக்திகளுக்கு எதிரானதாக அமைய வேண்டும்.**

**பேரினவாத சக்திகளோடு உடன்பட்டுக்கொண்டு தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறையை அரச இயந்திரத்தின் மூலம் செய்துவரும் ஆளும் வர்க்கத்துக்கு எதிரானதாக அமைய வேண்டும்.**

**இன்றுவரை தமிழ் மக்களும் ஏனைய சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் நியாயமான அதிகாரப் பகிர்வையும் அரசியல் தீர்வையும் வழங்க மறுத்து இழுத்தடித்துவரும் அரசாங்கங்களுக்கு எதிரானதாக அமைய வேண்டும்.**

**தமிழ் -சிங்கள முரண்பாட்டை ஊதிப்பெருக்கி சாதாரண மக்களை வதைத்தபடி தமது நலன்களுக்காக இலங்கையில் தலையிட நினைக்கும் வெளிநாட்டுச் சக்திகளுக்கு எதிரானதாக அமைய வேண்டும்.**

**தமிழ் மக்களது அரசியற் கோரிக்கைகள் ஒருபோதுமே சிங்களப் பொதுமக்களுக்கு எதிரானதாக இருக்கக்கூடாது.**

ஆனால் வருத்தமளிக்கும் விதமாக தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்போராட்டத்தை சிங்கள மக்களுக்கு எதிரானதாகவும் சிங்கள மக்கள் மீதான வன்முறையாகவும் தடம் மாற்றிக்கொண்டுபோகும் குறுகிய இனவாதக் கண்ணோட்டத்தையே பல்வேறு தமிழர் அமைப்புக்கள் கொண்டிருந்தன, கொண்டிருக்கின்றன.

இலங்கைப்பிரச்சினையை சரியாகப் புரிந்துகொள்ளாமல் வெறும் வாய்ப்பேச்சும் உணர்ச்சிவசப்படுதலும் நிரம்பியதாக உரிமைப்போராட்டத்தை மாற்றி அதனைக் கேலிக்குரியதாக மாற்றுகின்றன.
இது இனப்பகையை மேலும் மேலும் தூண்டுவதன் மூலம் . மக்களுக்கு எதிரான சக்திகளுக்கு நன்மை செய்வதாக மாறிப்போகும்.
இத்தகைய அமைப்புக்களை இனம்கண்டு புறக்கணிக்கவும் தோற்கடிக்கவும் தமிழ் மக்கள் அனைவரும் முன்வரவேண்டும்.

சிங்கள பவுத்த பேரினவாத சக்திகளைப் புறக்கணிக்கும் சிங்கள மக்களோடு, இந்த நாட்டின் அனைத்துமக்களும் சமமான அதிகாரங்களோடும் சம வாய்ப்போடும் வாழவேண்டும் என்று நேர்மையாக விரும்புகிற சிங்கள மக்களோடு இணைந்து போராட முயற்சி செய்யவேண்டும்.

இத்தகைய போராட்டமானது இலங்கையில் வாழும் அனைத்து மக்களதும் நல்வாழ்வுக்கானதாக அமையும். கொள்ளைக்கார உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளைத் தோற்கடித்து இலங்கையர்களுக்கு சிறப்பான எதிர்காலம் ஒன்றினை அமைத்துக்கொடுக்கும்.

**தமிழர் மீது நடந்த நடந்துவரும் பேரினவாத வன்முறையை ஒவ்வொரு தருணத்தும் தவறாது கண்டித்து வருகிறவர்கள் என்ற முறையில், அதே நியாயத்தின் அடிப்படையில் தமிழரின் பேரல் நடக்கும் வெறியாட்டைத்தைக் கண்டிக்கும் கடமையும் உரிமையும் நமக்குண்டு என்று நாம் கருதுகிறோம்.**

சிங்கள மக்கள் மீது தமிழகத்தில் இடம்பெற்ற இனவெறி கொண்ட வன்முறைகளுக்காக தமிழர் என்ற அடிப்படையில் சிங்கள மக்களிடம் மன்னிப்பைக் கோருகிறோம்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் சமூக வலையமைப்பில் பகிரப்பட்டிருந்த பிரசுரம்.**